# Visit of Deputy Prime Minister and Foreign Minister of Namibia to India (July 17-21, 2022)

July 20, 2022

---

## நமீபியா குடியரசின் துணைப் பிரதமர் மற்றும் வெளியுறவு அமைச்சரின் இந்திய சுற்றுப்பயணம் (ஜூலை 17-21, 2022)

ஜூலை 20, 2022

நமீபியா குடியரசின் துணை பிரதமரும் வெளியுறவு அமைச்சருமான மாண்புமிகு திருமதி நெடும்போ நந்தி ன்டாய்ட்வா அவர்கள் 2022 ஜூலை 17 முதல் 21 வரை இந்தியா-ஆப்பிரிக்கா வளர்ச்சி கூட்டாண்மை குறித்த 17 வது சிஐஐ எக்ஸிம் (CII EXIM) வங்கி மாநாட்டில் பங்கேற்பதற்காகவும், இந்தியாவுக்கும் நமீபியாவிற்கும் இடையே இருதரப்பு பேச்சுவார்த்தைகளை நடத்தவும் இந்தியா வருகிறார்.

இந்த சுற்றுப்பயணத்தின்போது நமீபியா குடியரசின் துணைப் பிரதமர் அவர்கள் நமது குடியரசுத் துணைத் தலைவரைச் சந்தித்துப் பேசினார். வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் மற்றும் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் துறையின் அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் ஆகியோருடன் விரிவான இருதரப்பு பேச்சுவார்த்தைகளையும் அவர் மேற்கொண்டார். இந்த சுற்றுப்பயணத்தின்போது மூன்று புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கையெழுத்தாகின. அவையாவன: (a) இந்தியாவுக்கும் நமீபியாவிற்கும் இடையே வனவிலங்கு பாதுகாப்பு மற்றும் நீடித்த பல்லுயிர் பயன்பாடு குறித்த புரிந்துணர்வு உடன்படிக்கை, (b) நமீபியாவிற்கும் இந்தியாவுக்கும் இடையே " பணிபுரிவதற்கு தூதரக உறுப்பினர்களின் கணவர்/மனைவி மற்றும் அவர்களைச் சார்ந்திருப்பவர்களுக்கு அனுமதி அளித்தல் குறித்த புரிந்துணர்வு உடன்படிக்கை மற்றும் (c) இந்தியாவின் தேசிய தடய அறிவியல் பல்கலைக்கழகம் (NFSU) மற்றும் நமீபிய காவல்துறை தடய அறிவியல் நிறுவனம் (NPFSI) இடையேயான புரிந்துணர்வு உடன்படிக்கை.

19 ஜூலை 2022 அன்று சிஐஐ எக்ஸிம் வங்கி மாநாட்டின் தொடக்க விழாவில் பங்கேற்று துணை பிரதமர் அவர்கள் தனது உரையை நிகழ்த்தினார். மாநாட்டின் ஒருபுறம், நமீபியாவுடன் வர்த்தகம் செய்வது குறித்த ஒரு அமர்வும் 2022 ஜூலை 20 அன்று நடைபெற்றது, அதில் முக்கிய வணிக நிறுவனங்கள் மற்றும் வர்த்தகர்கள் கலந்து கொண்டனர். சிறு தொழில்கள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, விவசாய

உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்பம், ஸ்டார்ட்அப்கள் மற்றும் தடுப்பூசி உற்பத்தி உட்பட பொருளாதாரத்தின் பல துறைகளை உள்ளடக்கிய வணிக கூட்டங்களிலும் பங்கேற்று பேசினார்.

நமீபியா குடியரசின் துணைப் பிரதமர் மற்றும் வெளியுறவு அமைச்சரின் இந்த பயணம் இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளுக்கு பலமான உத்வேகத்தை அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**புது டெல்லி**
**ஜூலை 20, 2022**

DISCLAIMER: This is an approximate translation. The original is available in English on MEA’s website and may be referred to as the official press release.